Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 15, 2023

திங்கட்கிழமை மே 15, 2023 | ஒளி: 08 கதிர்: 270 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10



14 இலட்சம் மாணவர்களுக்கு

## காலை உணவு இல்லை

இலங்கையில் பாடசாலை மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினருக்கு அதாவது, 14 இலட்சத்துக்கும் அண்மித்த எண்ணிக்கையிலான மாணவர்கள், போதியளவில் காலை உணவை உண்பதில்லை அல்லது எந்தவோர் உணவையும் உட்கொள்வதில் என்பது வைத்திய பரிசோதனை தகவல்களின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



அம்பாறையில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை

## தமிழின படுகொலைக்கு நீதி கோரிய ஊர்தி பவனி

■ கனகராசா சரவணன்

அம்பாறையில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை தமிழின படுகொலைக்கு நீதி கோரி, படுகொலைகளைச் சித்திரிக்கும் உருவங்கள் தாங்கிய வாகன ஊர்தி பவனியை அம்பாறை, வீரமுனையில் படுகொலை செய்யப்பட்ட நினைவு தூபியில் இருந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஞாயிற்றுக்கிழமை (14) ஆரம்பித்துள்ளது.

தொடர்ச்சி P2



கந்தசாமி ஆலய காணியில் புத்தர்:

# மண்துறந்த புத்தருக்கு தமிழர் மண் மீது ஆசையா?

### வில்லூன்றியில் 2ஆவது நாளாக ஆர்ப்பாட்டம்

■ கனகராசா சரவணன்

திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்னால் உள்ள வில்லூன்றி கந்தசாமி ஆலயத்துக்கு சொந்தமான காணியில், பௌத்த சின்னங்களை நிறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இரண்டாது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் (14) நடத்தப்பட்டது.

'தமிழ் உரிமைக்கு குண்டுகள் தீர்வாகாது', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'மண்துறந்து புத்தருக்கு தமிழர் மண் மீது ஆசையா?', 'திருமலை எங்கள் நகரம்', 'ஆக்கிரமிப்புக்கு அடிபணியோம்', 'வடக்கும் கிழக்கும் தமிழ் தாயகம்' போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வில்லூன்றி கந்தசாமி ஆலயத்துக்கு சொந்தமான காணியில், தாய்லாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட பௌத்த சின்னங்களை ஞாயிற்றுக்கிழமை (14) நிறுவுவதற்கு பௌத்த தேரர்களால் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



## தடை செய்யப்பட்ட பகுதிக்குள் அத்துமீறி நுழைவு

திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்பாக தொல்லியல் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில், தாய்லாந்தில் இருந்து வருகைதந்திருக்கும் பௌத்த தேரர்களின் உபசம்பதா நிகழ்வுக்காக பிரித் ஓதும் நிகழ்வு ஏற்பாடாகியிருந்தது.

எனினும், இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டால் அது இன நல்லிணக்கத்தை சீர்குலைக்கலாம் என்ற அடிப்படையில் மாவட்ட அரசாங்க அதிபரால் அந்நிகழ்வுகளை அவ்விடத்தில் நடத்த அனுமதி வழங்க தவிர்க்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## ஆஸியால் விமானம் அன்பளிப்பு

அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் அந்நாட்டு அரச விமானப்படைக்குச் சொந்தமான பீச் கிராப்ட் 'கேஏ350 கிங்எயார்' விமானம் ஒன்றை இலங்கைக்கு அன்பளிப்பு செய்வதற்கான கடிதம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## விலை குறைப்பு தாமதிக்கும்



இன்றையதினம் (15) முதல் பால்மா விலை குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் விலையை குறைப்பதில் தாமதம் ஏற்படும் என்று பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்தது.

திங்கட்கிழமை (15) முதல் அமலாகும் வகையில் பால் மாவின் விலையை 200 ரூபாயால் குறைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், பால்மா ஏற்றிவரும் கப்பல்களில் ஏற்படும் தாமதம் காரணமாக விலையை குறைப்பதில் தாமதம் ஏற்படும் என சங்கம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2



எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்

## 6.5 பில்லியனை விட இழப்பீடு அதிகரிக்கும்

### சேதங்களை மீள கணக்கிட நடவடிக்கை

புதிய கணக்கீடுகளின் பின்னர் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதங்களுக்கான முழு இழப்பீட்டு தொகையானது தற்போது மதிப்பிடப்பட்டுள்ள சுமார் 6.5 பில்லியன் டொலரை விடவும் மேலும் அதிகரிக்கலாம் என்று கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்

## நீதியமைச்சரிடம் இந்த வாரம் வாக்குமூலம்

எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து குறித்து வழக்கு தாக்கல் செய்கையில், இலஞ்சம் பெற்ற நபரை வெளிப்படுத்தியமை குறித்து நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அடுத்த வாரம் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு (சிஐடி) அழைக்கப்படவுள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## நாட்டில் டெங்கு அபாய வலயங்கள் அதிகரிப்பு




நாடளாவிய ரீதியில் டெங்கு காய்ச்சல் அதிகரிப்பு காரணமாக, டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

19 சுகாதார மற்றும் மருத்துவப் பிரிவுகள் மாத்திரம் டெங்கு அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு இருந்த நிலையில், 59 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள், டெங்கு அபாய வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்திலும் கண்டி, குருநாகல், காலி, கேகாலை மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

வாதுவ, உடுநுவர, வத்தேகம, அக்குரஸ்ஸ, வலஸ்முல்ல, புத்தளம, பதுளை, குருவிட்ட,

தொடர்ச்சி P2



## இலங்கையின் கணினி கல்வியறிவு வீதம் உயர்வு

2022ஆம் ஆண்டில் இலங்கையின் கணினி கல்வியறிவு வீதம் 35.7 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று தேசிய தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவர திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

திணைக்கள தரவுகளுக்கு அமைய 2021 ஆம் ஆண்டு 35 சதவீதத்தமாக காணப்பட்ட கல்வியறிவு 0.7 சதவீதமாக அதிகரித்துள்ளதுடன், 2020 ஆம் ஆண்டு 32 சதவீதத்திலிருந்து 3.7 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2



## இறக்குமதி கட்டுப்பாட்டை இன்னும் தளர்த்த தீர்மானம்

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக கடந்த ஆண்டு இறக்குமதி கட்டுப்பாடுகள் அமலாக்கப்பட்டு, சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டட நிலையில், மேலும் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து நிதி அமைச்சு அடுத்த சில நாள்களில் தீர்மானிக்கும் என்று அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2



ஹம்பாந்தோட்டையை

## சீனாவால் போருக்கு பயன்படுத்த முடியாது

ஹம்பாந்தோட்ட துறைமுகத்தை எந்தவொரு யுத்தத்துக்கோ அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்கோ சீனாவால் பயன்படுத்த முடியாது என்றும் சீனாவுடனான இலங்கையின் உடன்படிக்கை மிகவும் தெளிவாக உள்ளது என்றும் துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கைவிரல் அடையாளம் இன்று முதல் கட்டாயம்

அரச ஊழியர்கள், திங்கட்கிழமை (15) முதல் பணிக்குச் செல்லும்போதும் பணியிலிருந்து வெளியேறும் போதும் கைவிரல் அடையாளத்தை கணினியில் பதிவு செய்வதை கட்டாயமாக்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரால் அனைத்து நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## குரங்குகளுக்கு எதிராக அதிகுற்றச்சாட்டு

குரங்குகளால் மேற்கொள்ளப்படும் அழிவுகள் காரணமாக, பல பிரதேசங்களில் கித்துள் கைத்தொழில்துறை முழுமையாக சீரழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கித்துள் கைத்தொழிலாளர்கள், விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

கித்துள் கைத்தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எஹலியகொட, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் கித்துள் கைத்தொழிலாளர்களை சந்தித்த போதே, அவர்கள் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.



தொடர்ச்சி P2



## தென்னிலங்கையில் வெள்ள எச்சரிக்கை

தென் மாகாணத்திலும் இரத்தினபுரி மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக பலத்த மழைவீழ்ச்சி பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான சூறாவளியான மோச்சாவின் மறைமுக தாக்கம் காரணமாகவே நாட்டின் தென் பகுதிகளிலும் மழை தொடரும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது.

அடைமழை காரணமாக கொட்டாபொல, பிடபெத்தர, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தமிழின படுகொலைக்கு...

மே 18 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 14 ஆவது நினைவேந்தலையிட்டு, தமிழின படுகொலைக்கு நீதி கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஏற்பாட்டில் இனப்படுகொலையை சித்திரிக்கும் உருவம் தாங்கிய வாகன ஊர்தி பவனி ஆரம்பிக்கப்பட்டது.

அம்பாறை, வீரமுனை கோவிலில் 1990ஆம் ஆண்டு தமிழர்கள் 175 பேர் படுகொலை செய்யப்பட்ட நினைவு தூபில் சுடர் ஏற்றி, படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு ஆத்மசாந்திவேண்டி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தி, ஊர்தி பவனியை ஞாயிற்றுக்கிழமை (14) ஆரம்பித்தனர்.

இந்த ஊர்தி பவனி அங்கிருந்து கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அமைக்பட்ட நினைவு தூபியை சென்று, அங்கு சுடர் ஏற்றி, அதனை தொடர்ந்து சத்திருக்கொண்டான் படுகொலை செய்யப்பட் நினைவு தூபிக்கு சென்று சுடர் ஏற்றி, அஞ்சலி செலுத்தி, செங்லடி, வாழைச்சேனை ஊடாக வாகரையை சென்று, அங்கிருந்து இன்று திருகோணமலையை சென்றடையவுள்ளது.

இந்த ஊர்தி பவனி திங்கட்கிழமை, திருகோணமலையில் இடம்பெற்ற தமிழின படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள படுகொலை நினைவு தூபிகளை சென்று அஞ்சலி செலுத்தி 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலை சென்றடைய உள்ளது.

## ஆஸியால்...

பதிவிலக்கம் A32-673 கொண்ட விமானத்தை வழங்குவது தொடர்பாக அவுஸ்திரேலிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கிளேர் ஓ நீல் அளித்த கடிதம், இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பவுல் ஸ்டெபன் இனால், அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அன்பளிப்பு இலங்கையின் கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் திறனை மேம்படுத்தும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச குற்றச்செயல்களை எதிர்த்துப் போராடுவதில் இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பை இது உறுதிப்படுத்துவதுடன், கடல் மார்க்கமாக இடம்பெறும் மனிதக் கடத்தலை எதிர்க்கும் செயல்முறைக்கு பரந்த பங்களிப்பை வழங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல்சார் குற்றங்களுக்கு எதிராக இலங்கை வழங்கும் ஆதரவை, அவுஸ்திரேலிய அரசாங்கம் மிகவும் பாராட்டுவதாகவும், ஆட்கடத்தல் செயற்பாடுகளை குறிப்பிடத்தக்க அளவில் மட்டுப்படுத்துவதற்கும், கடல் கொள்ளை, பாதுகாப்பற்ற கடற் பிரயாணங்களிலிருந்து மக்களை பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு இரு நாடுகளுக்கிடையேயான இந்த ஒத்துழைப்பு வேலைத்திட்டம், காரணமாக அமைந்துள்ளதாகவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி விமான செயற்பாடுகள் குறித்து அவுஸ்திரேலிய அரசாங்கம் 12 மாத காலம் இலங்கைக்கு உதவிகளை வழங்கவுள்ளதோடு, அதன் பின்னர் அதன் பொறுப்புகள் இலங்கை அரசாங்கத்துக்கு கையளிக்கப்படும்.

அவுஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர், முதன்மைச் செயலாளர் பிரெட் செஹண்டர், பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் இயன் கேன் உள்ளிட்டவர்களும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

## ஸைகவிரல்...

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்த அமைப்பு கடந்த ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டு இருந்த நிலையில், அதை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் பணிக்கு சமூகமளிக்கும் விடயங்களில் விசேட சுற்றறிக்கைகள் மூலம் நிவாரணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், தற்போது நிலவும் சுமூகமான சூழ்நிலையில் அதற்கான தேவைகள் இல்லாத காரணத்தால் புதிய சுற்றறிக்கை திங்கள் முதல் (15) அமலாகவுள்ளது.

அமைச்சால் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் 1ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை திங்கட்கிழமை (15) முதல் இரத்துச் செய்யப்படுவதாகவும் அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் புதிய சுற்றறிக்கை விதிகளின்படி செயற்படுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

# மண்துறந்த புத்தருக்கு தமிழர் மண்மீது ஆசையா?

இதனையறிந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையிலான கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் சனிக்கிழமை (13) காலையில் பௌத்த சின்னங்களை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்ட காணிக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

'தமிழ் உரிமைக்கு குண்டுகள் தீர்வாகாது', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'மண்துறந்த புத்தருக்கு தமிழர் மண்மீது ஆசையா?', 'திருமலை எங்கள் நகரம்', 'ஆக்கிரமிப்பிற்கு அடிபணியோம்', 'வடக்கும் கிழக்கும் தமிழ் தாயகம்' போன்ற சுலோகங்களை ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் பகல் 2 மணிவரை இடம்பெற்றதன் பின்னர் அங்கிருந்து விலகி சென்றனர்.

அதனை தொடர்ந்து ஞாயிறுக்கிழமை மீண்டும் 2ஆவது நாளாக தொடர்ந்து அந்தப் பகுதியில் காலை 9 மணி தொடக்கம் பகல் 2 மணிவரை எதிர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

## 6.5 பில்லியனைவிட...

இலங்கை கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதங்களை மீள கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பணிப்புரைக்கு அமைய அறிக்கை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கடல் வளத்துக்கு ஏற்பட்ட சேதங்கள் கடந்த வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை மாத்திரமே கணக்கிடப்பட்டு உள்ள நிலையில், கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கைக்கு ஏற்பட்ட சேதங்களை கணக்கிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கப்பல் விபத்தால் ஏற்பட்ட சுற்றாடல் பாதிப்புகளுக்கு இழப்பீடு கோரி சிங்கப்பூர் நீதிமன்றத்தில் இலங்கை அண்மையில் வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில், இந்த வழக்கு இன்று (15) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

## நீதியமைச்சரிடம்...

கப்பல் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யும் போது நபர் ஒருவர் இலஞ்சம் பெற்றதாக அமைச்சர் வெளிப்படுத்தி இருந்தார்.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நபரின் வெளிநாட்டுக் கணக்குகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் புலனாய்வுப் பிரிவினருடன் விரிவான விசாரணை நடத்தப்பட்டு வருவதாக சீடியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கைக் கடலில் தீப்பிடித்த எக்ஸ்பிரஸ் பேர்ள்கப்பலினால் ஏற்பட்ட சேதங்களை மீள மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிப்புரையின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்படுவதாக கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## இறக்குமதி கட்டுப்பாட்டை...

இந்தத் தீர்மானத்தின் பின்னர், நிதிஅமைச்சின் அதிகாரிகள் கட்டுப்பாடு தளர்வு குறித்த விரிவான அறிக்கையை தொகுப்பார்கள் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அறிக்கையை தொகுக்கும் பணி ஏற்கெனவே நடைபெற்று வருவதாகவும், கட்டுப்பாடுகளை தளர்த்துவது விரிவான அறிக்கையில் உள்ளடக்கப்படும் என்றும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், இந்த அறிக்கை அடுத்த மாதம் சர்வதேச நாணய நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றார்.

சர்வதேச நாணய நிதிய மறுஆய்வு விரைவில் எதிர்பார்க்கப்படுவதால், பணியாளர் மட்ட ஒப்பந்தம் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டிற்கு எட்டிய நாணய நிதியத்தின் அனுமதியின் அடிப்படையில் அரசாங்கம் தனது பொருளாதாரத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் முதல் குழு மீளாய்வுக்கு முன்னரான ஆலோசனைக்காக தற்போது இலங்கை வந்துள்ளதுடன், எதிர்வரும் 23ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்து ஆலோசனைகளை மேற்கொள்ளவுள்ளது.

## சீனாவினால்...

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்க வேண்டிய நிலை ஏற்பட்ட போது, இந்தியா மற்றும் அமெரிக்காவைக் கையகப்படுத்த கூறியதாகவும் பின்னர், சீனர்கள் வந்து அதைக் கையகப்படுத்தினார்கள் என்றும் குறிப்பிட்டார். சீனாவுடனான ஒப்பந்தம் தனியார்மயமானது என்றும் வர்த்தகத்துக்கு மட்டுமே துறைமுகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பது அதில் தெளிவாக உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் பாதுகாப்பு குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும் என்றும் எங்களிடம் மிகவும் நட்பு ரீதியான உறவு உள்ளது என்றும் வலியுறுத்திய அமைச்சர், கொழும்பின் வலுச்சக்தி துறையை கட்டியெழுப்புவதற்கு புதுடெல்லி உதவுகிறது என்றார்.

திருகோணமலை துறைமுகத்துக்கு வந்து பெறுமதி சேர்ப்பதற்காக இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், கொழும்பு துறைமுகத்தில் அதானியின் முதலீடு குறித்தும் நம்பிக்கை தெரிவித்தார்.

## இலங்கையின்...

2022ஆம் ஆண்டு இலங்கையில் நகர்ப்புற மக்களிடையே கணினி கல்வியறிவு வீதம் 49.1 சதவீதமாகவும் கிராமப்புற மக்களிடையே 34.2 சதவீதமாகவும் உள்ளதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

மேல்மாகாணத்தில் வசிப்பவர்களில் 47.1 சதவீதமானவர்கள் கணனி அறிவுள்ளவர்கள் என்றும் சப்ரகமுவ மாகாணத்தில் 34.6 சதவீதமானவர்களும் மத்திய மாகாணத்தில் 34.2 சதவீதமானோருக்கு கணினி கல்வியறிவு வீதம் காணப்படுவதாகவும் திணைக்களம் தெரிவிக்கிறது.

## தென்னிலங்கையில்...

திஹாகொட, மாத்தறை மற்றும் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நில்வள கங்கையின் தாழ்நிலப் பகுதிகளில் சிறு வெள்ள நிலைமை ஏற்படக்கூடும் என்று நீர்ப்பாசன திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்தப் பகுதிகளில் வசிப்பவர்களும், அந்த வழியாக செல்லும் வாகனங்களும் எச்சரிக்கையுடன் மற்றும் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# இந்திய இழுவை வலைப் படகுகள் ஏற்படுத்தும் அழிவுகளுக்கு நட்டஈடு ஈடாகாது

இலங்கையின் கடல் வளங்களை அழிக்கும் வகையில் இந்தியக் கடற்றொழிலாளர்கள் இலங்கை கடலில் மேற்கொண்டு வருகின்ற சட்டவிரோதமான இழுவைமடி வலைத் தொழிலை முற்றாக கட்டுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், இழப்பீடுகள் எவையும் இந்தியப் படகுகளினால் ஏற்படுத்தப்படுகின்ற அழிவுகளுக்கு ஈடாக அமையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிலாபத்திற்கான விஜயத்தினை சனிக்கிழமை (13) மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் குறித்த பிரதேச கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிடப்பட்ட விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறி எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில்முறை காரணமாக சிலாபம் புத்தளம் பிரதேச கடற்றொழிலாளர்கள் மாத்திரமன்றி வடக்கு மாகாணத்தை சேர்ந்த கடற்றொழிலாளர்களும் பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருவதாகவும், அதனை தடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை, இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி வழங்குவது தொடர்பாக சிலாபம் கடற்றொழிலாளர்களினால் வெளிப்படுத்தப்பட்ட சந்தேகத்தினை, முற்றாக மறுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளமையில், குறித்த விஜயத்தின் போது கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

## காலை உணவு...

இது பொருளாதார பாதுகாப்பின்மையால் ஏற்பட்டிருக்கும் அழுத்தமாகுமென பாராளுமன்ற உறுப்பினரும் துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவருமான காமினி வலேபொட தெரிவித்தார்.

காலை உணவைத் தவிர்ப்பது குழந்தைகளின் மூளை மற்றும் உடல் வளர்ச்சியில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக சோதனைகள் மூலம் தகவல் வெளியாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தடைசெய்யப்பட்ட...

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சில பௌத்த தேரர்கள், சிங்கள மக்கள், திருகோணமலையில் மணிக்கூட்டு கோபுரத்தில் இருந்து சமய நிகழ்வுகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், தடை விதிக்கப்பட்ட பகுதிக்குள் முப்படையினரின் பாதுகாப்பையும் மீறி வலுக்கட்டாயமாக நுழைந்து தமது சமய நிகழ்வுகளை ஞாயிற்றுக்கிழமை (14) முன்னெடுத்திருந்தனர்.

தாய்லாந்து உபசம்பதா நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு 270 வருட பூர்த்தியை நினைவுகூரும் நோக்கில் திருகோணமலையிலிருந்து கண்டி நோக்கிய பாத யாத்திரையை முன்னெடுக்கும் முகமாக தாய்லாந்தில் இருந்து வருகைதந்த பௌத்த தேரர்கள், இயந்திரப்படகுகள் மூலமாக திருகோணமலை நகர இறங்குதுறையில் ஞாயிற்றுக்கிழமை (14) காலை வந்திறங்கினர்.

## விலை குறைப்பு...

மே மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் புதிய தொகுதிகள் நாட்டை வந்தடையும் என்றும் அதன்பின்னர் பால்மா விலையைக் குறைக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பால்மா இறக்குமதியாளர்களுடன் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்து பால் மாவின் விலைகளை குறைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

## நாட்டில் டெங்கு அபாய...

கேகாலை உள்ளிட்ட வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மழையுடன் கூடிய வானிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்பதால் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் தொடர்பில் மேல்மாகாண ஆளுநர் தலைமையில் திங்கட்கிழமை (15) கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது..

ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் மே மாதம் 3 ஆம் திகதி வரை அமல்படுத்தப்பட்ட டெங்கு தடுப்பு வாரத்தின் போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடலின் போது மீளாய்வு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## குரங்குகளுக்கு...

மிகுந்த சிரமத்துக்கு மத்தியில், கித்துள் மலரை வெட்டி பாணியை சேகரித்துக்கொண்டிருக்கும் போது குரங்குகளால் அவை நாசமாக்கப்பட்டுவிடுகின்றன. நாளொன்றுக்கு ஒருலீற்றர் பாணியைக்கூட சேகரிக்கவிடாமல், அதனை குரங்குகள் நாசமாக்கிவிடுகின்றன என்றும் அவர்கள் முறையிட்டுள்ளனர்.

இதன்போது கருத்துரைத்த அமைச்சர் மஹிந்த அமரவீர, "சீனாவின் தனியார் நிறுவனம் அவர்களுடைய மிருகக்காட்சி சாலைக்காக இந்நாட்டில் இருந்து குரங்குகளை கேட்டிருந்தனர்.

எனினும், சுற்றாடல் அமைப்புகள் சில முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகளால் அந்தத் வேலைத்திட்டம் கைவிடப்பட்டது. சில சட்டப்பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டதன் பின்னர், அந்த திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது" என்றார்.

# கம்பளை யுவதி மூச்சுத் திணறலால் இறந்தார்

கம்பளை பிரதேசத்தில் 6 நாட்களாக காணாமல் போயிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட 22 வயதுடைய யுவதியான பாத்திமா முனவ்வர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 24 வயதுடைய சந்தேகநபர் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதே பகுதியில் வசிக்கும் ஒரு பிள்ளையின் தந்தை என அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர், கம்பளை நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இன்று 14 பிற்பகல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

வெள்ளிக்கிழமை மாலை (மே 12) கைது செய்யப்பட்ட அவர், பாத்திமாவை கொலை செய்ததை ஒப்புக்கொண்டு, சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாகவும், அவர் தனது கோரிக்கையை நிராகரித்ததால், அவர் அவளை வனப்பகுதிக்கு இழுத்துச் சென்று பின்னர் கொலை செய்து உடலை புதைத்ததாகவும் ஒப்புக்கொண்டார்.

22 வயதுடைய சிறுமி, இந்த சம்பவத்தை தனது தந்தையிடம் கூறுவதை அச்சுறுத்தியதாகவும், அதன் பின்னர் கழுத்தை நெரித்து கொன்றதாகவும், பின்னர் குடையைப் பயன்படுத்தி மூச்சுத்திணறல் ஏற்படுத்தியதாகவும் பொலிஸாரிம் அளித்துள்ள வாக்குமூலத்தில் சந்தேகநபர் மேலும் தெரிவித்திருந்தார்.

பாத்திமா மூச்சுத் திணறலால் இறந்தார் என்பதை உறுதிப்படுத்தும் அதே வேளையில், பிரேத பரிசோதனை அறிக்கையில் அவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என்பதும் தெரியவந்தது.

பிரசவத்தின் போது இறந்த

# பெண்ணுக்கு நீதி கோரி முறைப்பாடு

■ எப். முபாரக்

திருகோணமலை, பாட்டாளிபுரம் கிராமத்தைச் சேர்ந்த இளம் கர்ப்பிணித் தாயொருவர், வைத்திய சாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். 24 வயதுடைய பெண் ஒருவரே சனிக்கிழமை (13) இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மூதூர் தள வைத்தியசாலையின் விசேட பெண் வைத்திய நிபுணர் குறித்த நாளில் வருகைதராமையால், மிகவும் ஆபத்தான முறையில் குழந்தையைப் பிரசவித்ததன் பின்னர், அதீத குருதிப்போக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, குழந்தையையும் தாயையும் திருகோணமலை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் குறித்த பெண்ணின் மரணத்துக்கு நீதி கோரி, குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ள நிலையில், மேலதிக விசாரனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



## பாவனைக்கு உதவாத 300 கி.கி கருவாடு மீட்பு

■ ராமு தனராஜா

பாவனைக்கு உதவாத பழுதடைந்த 300 கிலோ கிராம் கருவாடும், விற்பனைக்காக கருவாட்டை கொண்டு செல்வதற்கான லொறியையும் கைப்பற்றியுள்ளதாக ஹாலிஎல சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம்தெரிவித்துள்ளது.

பாவனைக்கு உதவாத கருவாடு விற்பனை செய்வதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து திடீர் சோதனை நடத்தி கருவாட்டை கைப்பற்றினர்.

சந்தேக நபரான வர்த்தகரை, பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.



## ஹாலிஎல விபத்தில் 11 பேர் காயம்

■ எம். செல்வராஜா

பதுளை, ஹாலிஎல பகுதியில் வானொன்று மரத்துடன் ஞாயிற்றுக்கிழமை (14) அதிகாலை மோதி விபத்துக்கு உள்ளானதில் 8 யுவதிகள் உட்பட 11 பேர் காயமடைந்துள்ளனர்.

பதுளையில் இருந்து விகாரையொன்றுக்கு சென்ற நடன குழுவினர், திரும்பிக்கொண்டிருந்த போதே, பதுளை - பண்டாரவளை வீதியில் ஹாலிஎல பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக உள்ள மரம் ஒன்றில் வான் மோதி. விபத்துக்குள்ளாகியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காரைதீவில் நாளை நடமாடும் சேவை

■ வி.ரி சகாதேவராஜா

காரைதீவு பிரதேச செயலகம் நடத்தும் நடமாடும் சேவை, நாளை செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 04.00 மணி வரை காரைதீவு பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறும் என பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவையில் ஆட்பதிவு திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, காணிகள் பிரிவு, இலங்கை மின்சார சபை, கல்வி திணைக்களம், பிரதேச சபை உள்ளிட்ட 15 நிறுவனங்கள் சேவையை வழங்கவுள்ளன.

## ரயிலுடன் மோதி இரண்டு யானைகள் உயிரிழப்பு

■ எப். முபாரக்

கந்தளாய், ஹித்துல் ஊற்று பகுதியில் ரயிலுடன் காட்டு யானைகள் மோதுண்டதில் இரண்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் சனிக்கிழமை (13) இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து திருகோணமலையை நோக்கிச் சென்ற இரவு நேர தபால் ரயிலுடன் காட்டு யானைகள் மோதியதில், இரண்டு யானைகள் இறந்துள்ளதோடு மற்றொரு யானை காயங்களுடன் காட்டுக்குள் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விளையாட்டின் மூலம் மாணவர்களை

## பிழையான போக்கிலிருந்து மீட்க முடியும்

### கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் நஜிம்

■ நூருல் ஹுதா உமர்

விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்கள் கல்வியில் தோற்று விடுவார்கள் என்ற நம்பிக்கை பிழையானது. விளையாட்டு மாணவர்களுக்கு உடல், உள ஆரோக்கியத்தை வழங்குவதுடன் நம்பிக்கையையும் மாணவர்கள் மத்தியில் வளர்க்கிறது என கல்முனை வலய கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தெரிவித்தார்.

கல்முனை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டிகள் கல்முனை வலய கல்வி அலுவலக உதவி கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் வெள்ளிக்கிழமை (12) நடைபெற்றது. இதன் இறுதி நாள் நிகழ்வில், கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர், விளையாட்டில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்கள் போதைப் பாவனையில் ஈடுபடுவதிலிருந்து தவிர்ந்துகொள்கிறார்கள். இஸ்லாம் அனுமதித்த வகையில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பெண் மாணவிகளும் விளையாட்டில் ஈடுபட வேண்டும் என்றார்.

## மூழ்கிக்கொண்டிருந்த 6 மீனவர்கள் மீட்பு

பேருவளை வெளிச்ச வீட்டிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் கடலில் மூழ்கிக் கொண்டிருந்த மீனவர்கள் அறுவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடற்படையின் இலங்கை கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்துக்குச் சொந்தமான CG208 படகை பயன்படுத்தி மீனவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

மழையுடனான வானிலையால் குறித்த நீண்டநாள் படகானது கடலுக்குள் மூழ்கிக் கொண்டிருந்ததாக கடற்படை தெரிவித்துள்ளது.

மொக்கா சூறாவளியால் காற்றின் வேகம் அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## புதுக்குடியிருப்பில் சிறுமியை கடத்த முயற்சி

### இளைஞர்கள் தப்பி ஓட்டம்; ஒருவர்கைது

■ செ. கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு, கைவேலி பகுதியில் சிறுமியைக் கடத்த முயன்ற சம்பவம் தொடர்பில் இளைஞன் ஒருவரை மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

சனிக்கிழமை (13) காலை ஏழு மணியளவில் கைவேலியில் 10 வயதுடைய பாடசாலை சிறுமி, தனியார் வகுப்புக்காக தாயாரால் மோட்டார் சைக்கிளில் கொண்டுசென்று இறக்கிவிட்ட நிலையில், வீதியில் சென்ற இளைஞர்கள் சிறுமியை அழைத்து கையைப் பிடித்து, முகத்தைத் துணியால் பொத்திப்பிடித்த போது சிறுமி மயங்கி விழுந்துள்ளார். வீதியால் சென்ற மக்கள் இதை அவதானித்து, சத்தமிட்ட போது இளைஞர்கள் தப்பி ஓடியுள்ளார்கள்.

சிறிது நேரத்தின் பின்னர் கண்விழித்த சிறுமியின் தகவலின் படி, குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞனின் பெயரை சிறுமி கூறியதற்கு இணங்க, கிராம அபிவிருத்தி சங்கத்தினர் இளைஞனை அழைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அந்த இளைஞனைக் கைதுசெய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

பாதிக்கப்பட்ட சிறுமியையும் அவரது தாயாரையும் முல்லைத்தீவு மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காக கொண்டுசென்று, அங்கு சட்டவைத்திய அதிகாரியின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைய சிறுமி மருத்துவமனையில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

## நேரம் இன்மையால் யாப்பு திருத்தம் இல்லை

■ க. அகரன்

தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் வவுனியா மில்வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (14) இடம்பெற்றது.

தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில்,செயலாளர் ப.சத்தியலிங்கம், சி.வி.கே.சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான .யோகேஸ்வரன், சி.சிவமோகன், பா.அரியநேந்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் மேயர் சரவணபவன், பீட்டர் இளஞ்செழியன் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழரசு கட்சியின் யாப்பு திருத்தம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டபோதிலும் போதுமான நேரம் இல்லாமையால் முழுமையாக யாப்பு திருத்தம் ஞாயிற்றுக்கிழமை (14) இடம்பெறவில்லை.

## அல்லைப்பிட்டியில் ஆணின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி கடற்கரையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. கரையொதுங்கியிருந்த நிலையில் குறித்த சடலம் சனிக்கிழமை (13) மாலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தின் உடற்பாகங்களில் பல பகுதிகள் சிதைந்து போயுள்ளதால் அடையாளம் காண்பதில் சிக்கல் நிலவுவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## இளம் காதல் ஜோடிக்கு வழிகாட்டிய இருவர் கைது

பண்டாவளை, கொஸ்லந்த, உடடியலும பிரதேசத்தில் இளம் காதல் ஜோடிக்கு அனுமதியின்றி இரவைக் கழிக்க இடம் வழங்கிய சுற்றுலா வழிகாட்டிகள் இருவரை இம்மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பண்டாரவளை நீதவான் திருமதி கே.ஜீவராணி உத்தரவிட்டுள்ளார்.

ஹப்புத்தளை மற்றும் பூனாகலை பிரதேசங்களைச் சேர்ந்த 24 மற்றும் 33 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற குறித்த பகுதியில் காதலர்கள் இருவர் கூடாரமிட்டுத் தங்கிய பொழுது, காட்டு யானையின் தாக்குதலுக்கு இருவரும் இலக்காகினர்.

23 வயதுடைய காதலி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அப்பெண், தனியார் வைத்தியசாலை ஒன்றில் தாதியாக பயிற்சி பெற்று வந்த மாத்தறை, கேகனதுர பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

குறித்த பெண்ணின் காதலன் (22) படுகாயமடைந்து தற்போது தியத்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அனுமதிப்பத்திரம் இன்றி சுற்றுலா வழிகாட்டிகளாக பணியாற்றிய இருவரை கொஸ்லந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து பண்டாரவளை நீதவான் நீதிமன்றில் சனிக்கிழமை (13) ஆஜர்படுத்தினர்.

கடும் சிரமத்துக்கு மத்தியிலேயே அந்த காட்டுயானை அங்கிருந்து விரட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒட்டிசுட்டானில் புதையல்

### தோண்டிய ஆறு பேர் கைது

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட கனகரத்தினபுரம் பகுதியில் புதையல் தோண்டிய சந்தேகத்தின் பேரில் ஆறு பேரை ஒட்டிசுட்டான் பொலிஸார் கைதுசெய்தனர்.

சனிக்கிழமை (13) மாலை கனகரத்தினபுரம், பேராற்றை அண்மித்த பகுதியில் தொல்பொருள் திணைக்களத்துக்கு உரித்தான இடத்தில், புதையல் தோண்டப்படுவதாக ஒட்டிசுட்டான் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸ் குழு, அங்கு புதையல் தோண்டிய குழுவைக் கைதுசெய்தனர்.

கனகரத்தினபுரம், மாத்தளை ஆகிய இடங்கைச் சேர்ந்த இருவரும் கிளிநொச்சியைச் சேர்ந்த நால்வரும் இவ்வாறு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட சுட்டியல், மண்வெட்டி என்பவற்றுடன் தொல்பொருள் ஆபரணம் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களையும் சான்று பொருட்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது, குறித்த நபர்களை 23.05.23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

## தொழிற்சங்க போராட்டத்தை சந்திக்க நேரிடும்

நிவ்பர்க் தோட்ட காணியை அத்துமீறி கைப்பற்றுவதற்கு கடந்த இரு வாரங்களுக்கு முன்பாக வெளியார் உட்புகுந்துள்ளனர். தோட்ட நிர்வாகத்தின் உத்தரவுடன் இளைஞர்களும் தொழிலாளர்களும் அவர்களை விரட்டுவதற்கு சென்றிருந்தபோது, அங்கு நடைபெற்ற கைகலப்பில் ஒரு சிலர் காயத்துக்கு இலக்கானதோடு அப்பாவி தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் கள விஜயம் மேற்கொண்டார்.

அரசாங்கம் பெருந்தோட்ட நிர்வாகத்தினருக்கு குத்தகைக்கு வழங்கிய காணியில் அத்துமீறி வெளியாட்கள் ஆக்கிரமிப்பு



நடவடிக்கையில் ஈடுபட்டதும் அரசாங்கம் ஹப்புகஸ்தன பெருந்தோட்ட நிர்வாகத்துக்கு குத்தகைக்கு வழங்கிய காணியை ப்ரவுனன்ஸ் கம்பெனி உப குத்தகைக்கு எடுத்திருப்பதும் பாரிய குற்றமாகும் என்றார்.

தோட்ட முகாமத்துவத்தை கையாளும் பொறிமுறையும் சட்டபூர்வமாக தவறான ஒரு நடைமுறையாகும். அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதை விடுத்துவிட்டு, கைகலப்பில் ஈடுபட்டார்கள் என்று பொலிஸாரும் இராணுவமும் பெருந்தோட்ட பகுதிக்குள் உள்நுழைந்து, அப்பாவி தோட்டத் தொழிலாளர்களை கைது செய்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. இதன் காரணமாக என்னுடைய தொப்புள் கொடி உறவுகள் உள ரீதியில் பாதிப்படைந்துள்ளனர்.

கைதானவர்களை பண்டாரவளை நீதிமன்றத்தில் திங்களன்று ஒப்படைப்பதோடு அவர்களை விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் உயர் அதிகாரி உறுதியளித்திருந்தார்.

அவ்வாறு நடைபெறாத பட்சத்தில் பாரிய ஒரு தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

# பெண்கள், பதின்மப் பருவத்தினரின் பாதுகாப்பு கேள்விக்குறியானது

இலங்கையில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளமை தொடர்பில் அறிந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக, கடந்த வாரம் களுத்துறையில் இடம்பெற்ற பல சம்பவங்களுடன், கம்பளை பகுதியில் இடம்பெற்ற இளம் யுவதியின் கொலைச் சம்பவம், கண்டியில் சிறுமி ஒருவர் மாடியிலிருந்து கீழே குதித்தமை, மன்னார் மற்றும் திருகோணமலையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் சிறுவர் கடத்தல் சம்பவங்கள் இதில் அடங்குகின்றன.

இலங்கையில் பெண்கள் மற்றும் பதின்மப் பருவத்தைச் சேர்ந்தவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. இவ்வாறானவர்கள் பாதிக்கப்படுகின்றமை தொடர்பான செய்திகள் வெளியாவதுடன், ஒரு சில தினங்கள் அதுபற்றி பேசப்பட்டதும், பின்னர் பிறிதொரு சம்பவம் வெளியே வந்ததும், ஏற்கெனவே நடந்தேறிய சம்பவங்கள் சாதாரண வழமையான குற்றங்களாக மாத்திரம் பார்க்கப்பட்டு, மக்களால் மறக்கப்படுகின்றன.

இதுபோன்ற சம்பவங்களை முழுமையாக இல்லாமல் செய்ய முடியாவிட்டாலும், இவை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அத்துடன், இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கத் தவறினால், இந்நாட்டின் பெண்கள், சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பாதுகாப்பு தரப்பினருக்கும் முறையான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், குறித்த சமூகத்தில் அவர்கள் மேற்கொள்ளும் விசாரணைகளின் போது, பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அவர்கள் செயலாற்ற வேண்டியது, பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையை உணர்ந்து, அவர்களின் பிரத்தியேகத்தன்மைக்கு மதிப்பளித்து இயங்குவது பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, சந்தேகநபரின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக, ஊடகங்களில் கசியும் சம்பவங்கள் அதிகரிக்கின்றன.

இவ்வாறாக கசியும் தகவல்கள் வாசகர்களையும், ரசிகர்களையும் தூண்டுவதாக எண்ணி, அதிகளவு உணர்வூட்டும் வகையில் பிரசாரப்படுத்தும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. கம்பளையில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்திலும் இவ்வாறான போக்கை அவதானிக்க முடிந்தது.

செய்திகளுக்கு வரும் சம்பவங்களுக்கு அப்பால் வெளிவராத பல கொடுமைகள் இடம்பெறாமலில்லை. எவ்வாறாயினும், அவ்வாறு வெளிவரும் சம்பவங்கள் பற்றி, சகல தரப்பினரும் பொறுப்பு வாய்ந்த வகையில் செயலாற்றுவதுடன், அவ்வாறு இடம்பெறும் சம்பவங்களை இரசனையை தூண்டும் வகையில் செய்தி அறிக்கையிட்டு, பாதிக்கப்பட்டவர்களை மேலும் அசௌகரியத்துக்கு உள்ளாக்காமல் இருக்க வேண்டியது அனைவரின் பொறுப்பாகும். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதற்கு அவ்வாறான செய்திகள் அறிக்கையிடப்படும் முறையும் ஒரு காரணியாக அமைந்துவிடலாம்.

மேலும், இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கான தண்டனை துரிதமாக வழங்கும் வகையில் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும். கிராமிய சமூகமட்டத்தில் பொது விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.


தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

## எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்படுவாரா?



என்.கே அஷோக்பரன்

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன இல்லாவிட்டாலும், அவர் தொடக்கி வைத்த வெள்ளிக்கிழமை விவகாரப் பயம், இலங்கையர்களிடம் தொடர்வதாகவே தெரிகிறது! கடந்த வெள்ளிக்கிழமை (12) சமூக ஊடகங்களில் தீயாகப் பரவிய வதந்தி, மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்படப் போகிறார் என்பதுதான்!

அரசியலமைப்பின் படி, தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன பதவி விலகினாலோ, ஜனாதிபதியால் அவர் பதவி விலக்கப்பட்டாலோ, அல்லது அவர் எம்.பி பதவியை இழந்தாலோ, பாராளுமன்றத்தின் நம்பிக்கையைத் தக்கவைக்கக் கூடியவர் என்று ஜனாதிபதி நினைக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை, பிரதமராக நியமிக்க முடியும்.

ஆகவே, இதன் நடைமுறை ரீதியிலான இரத்தினச் சுருக்கம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பாராளுமன்றத்தில் இன்னமும் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவும் விரும்பினால், மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகலாம் என்பதுதான்! நிற்க!

கடந்த வருடம், இதே மாதமளவில் இலங்கை தனது சுதந்திர வரலாற்றில் மோசமான பொருளாதாரப் பிறழ்வைச் சந்தித்து 'திக்கி விக்கி' நின்றது. மின்வெட்டுகள், எரிபொருள் தட்டுப்பாடு, பொருட்களுக்கான தட்டுப்பாடு, அதீத பண வீக்கம், பொருட்களின் விலைகளில் அதிரடி உயர்வு என இலங்கை மக்கள் திண்டாடி நின்றனர்.

அதனால் வந்த கோபத்தின் விளைவாக மக்கள் வீதிக்கு இறங்கினர். நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்துக்குள் தள்ளிய ஜனாதிபதி கோட்டாவை பதவி விலகக் கோரிய போராட்டங்கள், அதிரடியாக தலை தூக்கின. விளைவாக முதலில் ராஜபக்ஷர்கள் பதவி விலகினர். பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலகினார். தொடர்ந்து, தனி ஆளாக பாராளுமன்றத்தில் இருந்த ரணில் விக்கிரமசிங்க பிரமரானார். பிறகு கோட்டா பதவி விலகி, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானமை யாவரும் அறிந்த கதை.

உண்மையில், ஜனாதிபதியாகிய பின்னர், ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க செய்த நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. இன்றைய அரசியல் சூழலில், அவருடைய அந்தச் செயல்களுக்கான அங்கிகாரம் கிடைக்காமல் இருக்கலாம். ஆனால், வரலாறு அவரை சரியாக அங்கிகரிக்கும்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க ஒன்றைக் கவனத்தில் கொள்ளுதல் அவசியம். இலங்கை பொதுமக்களில் பெரும்பான்மையானவர்கள், ராஜபக்ஷர்கள் மீது கடும் விசனமும் கோபமும் கொண்டிருக்கிறார்கள். 2022ஆம் ஆண்டு வரை ராஜபக்ஷர்களை தமிழர்களும் முஸ்லிம்களும், தாராளவாத சிங்களவர்களும்தான் வெறுத்தார்கள். ராஜபக்ஷர்களின் பேரினவாத அரசியலும், அவர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளும் அதற்கு முக்கிய காரணங்களாகும்.

ஆனால், பெரும்பான்மைச் சிங்கள-பௌத்த மக்களிடம், ராஜபக்ஷர்களுக்கு கணிசமான செல்வாக்கு இருந்தது. அவர்கள் தமது பெரும் சாதனையாகச் சொல்லிக்கொள்ளும் 'யுத்த வெற்றி' அதற்கு முக்கிய காரணம்.

ஆனால், 2022ஆம் ஆண்டு, பொருளாதாரப் பிறழ்வு, ராஜபக்ஷர்கள் மீது கடும் கோபத்தையும் விசனத்தையும் அவர்களை ஆதரித்த சிங்கள-பௌத்த மக்களிடையேயே ஏற்படுத்தியது. அதனால்தான், அவர்களுடைய வழமையான தகிடுதத்தங்களால் கூட, தமது ஆட்சியைக் காப்பாற்ற முடியாமல் போனது. அவர்கள் பதவிகளை விட்டு விட்டு, ஓடினார்கள் என்பதுதான் உண்மை.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானபோது, அவரை அந்தப் பதவிக்கு தெரிவுசெய்ய அரசியலமைப்பு அடிப்படையிலான பாராளுமன்ற வாக்கெடுப்பின் போது, பெரும்பான்மையாக வாக்களித்தவர்கள் ராஜபக்ஷர்களின் பொதுஜன பெரமுனவினர்தான். அதனால், 'ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷர்களைக் காப்பாற்ற வந்தவர்' என்ற விமர்சனத்தை தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறார்.

ராஜபக்ஷர்களைப் பொறுத்தவரையில், ரணில் என்பவர் பாதுகாப்பான தெரிவு. அதற்கு முக்கிய காரணம், அவரது ஐக்கிய தேசிய கட்சிக்கு பாராளுமன்றத்தில் ஓர் ஆசனம் மட்டுமே இருந்தது. அவருக்கு பெரும்பான்மையின மக்களிடையே பெரும் செல்வாக்கு இருக்கவில்லை. பிரதான எதிர்க்கட்சியின் தலைமைப்பீடம், அவரது வைரியாக இருந்தது.

ஆகவே, ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருந்தாலும், பாராளுமன்றத்தின் ஊடாகத் தனக்கு வேண்டியவற்றை ஆற்றிக்கொள்ள, ஜனாதிபதி ரணில் முழுமையாக பொதுஜன பெரமுனவில் தங்கியிருக்க வேண்டியதாக இருக்கும்.

இந்தக் கணக்கில்தான் ராஜபக்ஷர்கள், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு ஆதரவளித்தனர். இந்த முடிவு, ராஜபக்ஷர்களின் ஆஸ்தான ஆதரவாளர்களாக இருந்து இனவாத அரசியலை முன்னெடுத்த பலரையும், ரணில் விக்கிரமசிங்கவோடு தனிப்பட்ட குரோதம் கொண்ட பலரையும் அதிருப்தியடையச் செய்தது.

இதன் விளைவாக விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, டளஸ் அழகப்பெரும, ஜீ.எல் பீரிஸ், சரத் வீரசேகர போன்றோர், ராஜபக்ஷர்களின் பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து இயங்கத் தொடங்கினர். இதேவேளை, ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, டயானா கமகே ஆகிய ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து வந்த முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியினர், மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவோடு கைகோர்த்துக்கொண்டனர்.

ராஜபக்ஷர்கள் இல்லாத அமைச்சரவையைக் கொண்டு, இதுவரை காலமும் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொருளாதாரப் படுகுழியிலிருந்து மீட்கும் கடும்பணியை முன்னெடுத்து வருகிறார். அதில் கணிசமான அடைவுகளையும் அவர் பெற்றிருக்கிறார். மின்வெட்டுகள் இல்லாமல் போயின; எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொடர்ந்து அனைவருக்கும் கிடைக்கிறது; பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் ஒப்பீட்டளவில் குறைந்துள்ளன; பணவீக்க வீதம் கணிசமாகக் குறைந்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம், இலங்கையின் பொருளதாரத்துக்குப் புதிய நம்பிக்கையைத் தந்திருக்கிறது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி போன்றோரின் கடும் விமர்சனங்களுக்கு நடுவே, ஜனாதிபதி ரணில், மேற்சொன்ன அனைத்து அடைவுகளையும் கொஞ்சம் கொஞ்சமாக சாதித்ததன் விளைவாக, கட்சிசாரா பொதுமக்களிடையே, அவருக்கு கொஞ்சம் நல்ல பெயர் கிடைத்திருக்கிறது. இந்த நிலையில்தான், மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் போகிறார் என்ற வதந்தி உலா வருகிறது.

பொதுஜன பெரமுனவுக்குள் பசில் ராஜபக்ஷ, தன்னை முன்னிறுத்தத் தொடங்கி இருக்கிறார். ராஜபக்ஷர்கள் இல்லாத அமைச்சரவையைக் கொண்ட ஆட்சியில், ஆளும்கட்சியினராக இருந்தும் தமக்கு வேண்டியவற்றை செய்துகொள்ள முடியாமல், ராஜபக்ஷ ஆதரவாளர்கள் கடும் அதிருப்தியில் இருக்கிறார்கள். இந்த அதிருப்தி, பசில் ராஜபக்ஷவை முன்னிறுத்தும் அவர்களது அரசியலுக்கு அச்சாரமாக மாறியிருக்கிறது. பசில் ராஜபக்ஷ முன்னிறுத்தப்படுவதுதான், மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்படுவது பற்றிய பேச்சின் தோற்றுவாயாக இருக்கிறது.

இதற்கு இரண்டு பரிமாணங்கள் உள்ளன. ஒன்று, ராஜபக்ஷர்களுக்கு இடையிலான போட்டி. ராஜபக்ஷர்கள் தமது உள்வீட்டுப் பிரச்சினைகளை வெளியில் கொண்டுவருவதில்லை. ஆனால், அதன் அர்த்தம் உள்வீட்டுப் பிரச்சினைகள் இல்லை என்பதல்ல. பசில்-நாமல் பனிப்போரில், பசிலின் பக்கம் ஆதரவாளர்கள் காற்று வீசத்தொடங்கி உள்ளது. மஹிந்த பிரதமரானால், அந்தக் காற்று மஹிந்த பக்கம் வரும். அதன்வழியாக நாமல் பக்கம் வரும் என்பது ஒரு கணக்கு. இதற்காக, மஹிந்த பிரமராக முயலலாம்.

மற்றைய பரிமாணம், பொதுஜன பெரமுன, பசில் ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் முழுமையாகப் போவதை ரணில் விரும்பாமை. பசிலுக்கும் ரணிலுக்கும் இடையில் நட்புக் கிடையாது; புரிந்துணர்வும் கிடையாது; நம்பிக்கையும் கிடையாது. ஆகவே, பொதுஜன பெரமுன, முழுமையாக பசிலின் கட்டுப்பாட்டுக்குள் செல்வதை ரணில் விக்கிரமசிங்க விரும்பமாட்டார்.

ரணிலின் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட, பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவினரின் ஆதரவு அவசியம். பசில் வந்தால், அந்த ஆதரவுக்காக அவர் விதிக்கும் நிபந்தனைகள் சிக்கலானவையாக அமையும். ஆகவே, பொதுஜன பெரமுனவுக்குள் பசில் தலையெடுப்பதைத் தடுக்க, மஹிந்தவைப் பலப்படுத்த அவரை பிரமராக்கலாம்.

எது எவ்வாறாயினும், மஹிந்த பிரதமராக நியமிக்கப்பட்டால், அது கட்சி சாராப் பொதுமக்களிடையே, அதிலும் குறிப்பாக தாராளவாத சிங்களவர்களிடையேயும் சிறுபான்மையின மக்களிடையேயும் ரணில் மீதான நம்பிக்கையைக் குறைப்பதாகவே அமையும். அந்த முடிவை எடுக்க முதல், ஜனாதிபதி ரணில் இது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

கடந்த சில மாதங்களில் அவர் சம்பாதித்த நற்பெயரை அவர் இழக்க வேண்டியிருக்கும். இதுதான் ராஜபக்ஷவை பிரதமராக்குவதற்கு ரணில் கொடுக்கும் விலையாக அமையும். அதனால்தான், மஹிந்தவை விட, ஜனாதிபதி ரணிலை விட, ராஜபக்ஷர்களை விட, மஹிந்த பிரதமராக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியினரும் ஜே.வி.பியினரும் உள்ளுக்குள் வேண்டிக்கொண்டிருப்பார்கள்.

மஹிந்தவின் நியமனத்தைக் காரணம் காட்டி மீண்டும் 'அறகலய' எழலாம்; பொருளாதார மீட்சி ஸ்தம்பிக்கலாம். இது பற்றி ஜனாதிபதி ரணில் கவனம் கொள்வது அவசியம்.



## வாழ்வியல் தரிசனம்

சோர்வு நிலைபெற்று விட்ட வலிமை இன்மையே, நிலையாமைக்கான உண்மைக் காரணத்தை எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால், எப்பொழும் விழிப்புடனும் எழுச்சி நிலையிலும் இருந்தால், வாழ்க்கையில் இன்ப நிலையை இதயம் உற்சாகத்துடன் தேடும். களிப்பு தானாகவே ஆட்கொண்டு விடுகின்றது.

மனமாற்றம் எவரையும் மாற்றிவிட வல்லது. தேகபலம் குன்றினால் எண்ணங்களில் திசை மாறலாம்.

மனிதர் எப்பொழுதும் ஒரே மாதிரி வாழ்வது என்பது, அவரவர் நினைப்புகளைப் பொறுத்தது.

தேவையற்ற எண்ணங்களுக்குள்ளும் உணர்ச்சிகளுக்குள்ளும் அடைபடக்கூடாது. சலனத்தை உடைத்து, சஞ்சலங்களை எரித்துவிடுக!

எளிமையான வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் வாழ, இதய பரிசுத்தம் எம்முடன் எப்பொழுதும் நிலைத்து நிற்க வேண்டும்.

எதிர்ப்புகளை அறிவால், வீரத்தால் அமைதியுடன் கையாண்டால், எதிர்ப்புகள் கரைந்துவிடும்.

கஷ்டங்கள் வந்தால் அது நிரந்தரமானது எனக் கருதும் நிலையை துளியும் வளர்த்துவிடலாகாது. பிரச்சினைகள் வந்தால் அவற்றை உணர்ச்சியின் வழிநின்று வளர்ப்பதை விட்டு, அறிவுடன் இணைந்து தகர்ப்பதே புத்திசாலித்தனம்.

உங்களின் தவறுகளை ஏற்றுக்கொள்ள அஞ்சாதீர்கள்! நீங்களும் மனிதர்கள்தான். நெஞ்சத்து நீதிமன்றத்தில் உண்மைகளை ஏற்றுக்கொள்ள வெட்கம் தேவையில்லை. உண்மையே வாழ்வு.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வவுனியாவில் நடைபாதைகளை ஆக்கிரமிக்கும் வியாபாரம்

வவுனியா நகரப் பகுதியில், பயணிகள் நடைபாதைகளை வியாபார நிலையங்கள் ஆக்கிரமிப்பதால் பயணிகள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

கொரவப்பத்தான வீதி, சந்தை சுற்றுவட்ட வீதி என்பவற்றிலேயே இவ்வாறு நடைபாதை வியாபாரம், வீதிகளில் மக்களின் பயணத்துக்கு இடையூறான விதத்தில் காணப்படுகின்றது.

இது தொடர்பில், கடந்த காலங்களில் நகரசபை நடவடிக்கை எடுத்து வந்தபோதிலும், தற்போது மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டதன் பின்னர், இவ்விடயம் தொடர்பில் மாநகர சபை அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றது என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்நிலையில், சந்தை சுற்றுவட்ட வீதியில் கழிவு கால்வாய்க்கு மேல், மரக்கறிகளை பரப்பி வைத்து விற்பனை செய்து வரும் நிலையில், அதன் சுகாதார நிலைமைகள் தொடர்பிலும் பலரும் கவலை தெரிவிப்பதுடன், அவ் வீதியை பயன்படுத்த முடியாதவாறு, வீதியை ஆக்கிரமித்து மரக்கறிகளை பரவி வைத்திருப்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், வவுனியா மாநகர சபையே பொறுப்புடன் இவ்விடயத்தைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என பாதிக்கப்படும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

க. அகரன்

வெசாக் பண்டிகையை முன்னிட்டு வைத்தியசாலைகளுக்கு

# மருந்துப் பொருட்களை வழங்கியது SLT-MOBITEL

SLT-MOBITEL, நாடு முழுவதையும் சேர்ந்த வைத்தியசாலைகளுக்கு ரூ. 8 மில்லியனுக்கு அதிகமான அத்தியாவசிய மருந்துப் பொருட்களை நன்கொடையாக வழங்கி, வெசாக் பண்டிகையை கொண்டாடியது. 'சம்பந்தியாவே தஹமி சத்காரய' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், வெசாக் பண்டிகையின் இரக்கம் மற்றும் பிறருக்கு உதவுதல் போன்ற பெறுமதிகளை உறுதி செய்தும், நிறுவனத்தின் சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) அர்ப்பணிப்புகளுக்கு அமைவாகவும் இந்தத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

SLT-MOBITEL இன் துணை நிறுவனமாக, eChannelling இனால், இந்தத் திட்டத்துக்கு ஆதரவளிக்கப்படுவதுடன், அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் விநியோகம் மேற்கொள்ளப்படுவதுடன், நன்கொடை வழங்கும் திட்டத்தின் போது, சகல சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்கப்படுகினறன.



இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் இந்த நன்கொடை வழங்கும் திட்டம் இடம்பெற்றதுடன், இதில் SLT குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ, SLT சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அநுருத்த சூரியாரச்சி, இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் அனோஜா ரொட்ரிகோ, இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ஸ்ரீயாணி ரணசிங்க, இதர சில SLT-MOBITEL ஊழியர்கள் மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலையின் ஊழியர்கள் சிலரும் பங்கேற்றிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை, கண்டி தேசிய வைத்தியசாலை, பதுளை மாகாண பொது வைத்தியசாலை, அநுராதபுரம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, கராபிட்டிய போதனா வைத்தியசாலை, குருநாகல் போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கு SLT-MOBITEL இடமிருந்து அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

'சம்பந்தியாவே தஹமி சத்காரய' திட்டம் தொடர்பில் SLT குழுமத்தின் தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், "சமூகத்தில் நிலவும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் எமது இந்த ஆண்டுக்கான வெசாக் நிகழ்ச்சித் திட்டம் அமைந்துள்ளது. நாட்டில் சத்திரசிகிச்சை, ஆயுள் காப்பு, நுண்ணுயிர் கொல்லி போன்றவற்றுக்கான அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவும் நிலையில், இலங்கையின் சமூகப் பொறுப்பு வாய்ந்த நிறுவனம் எனும் வகையில் SLT-MOBITEL முன்வந்து, தேசத்துக்கு உதவிகளை வழங்க எதிர்பார்க்கின்றது. எந்தவொரு சமூகத்திலும் மற்றும் பொருளாதாரத்திலும் சுகாதாரம் என்பது முக்கிய அங்கமாக அமைந்திருப்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம். பௌத்த கொள்கையின் பிரகாரம் வழங்குவது என்பதற்மைய, எமது குடிமக்களின் நலனில் பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கின்றோம்" என்றார்.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் அனோஜா ரொட்ரிகோ கருத்துத் தெரிவிக்கையில், "சகல குடிமக்களுக்கும் வழங்கும் சுகாதார பராமரிப்பு வசதிகளின் உள்ளக அங்கமாக மருந்துகள் அமைந்துள்ளன. அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் இன்றி, எம்மால் உயிர்களை பாதுகாக்க முடியாது; சுகாதாரத்தை ஊக்குவிக்க முடியாது; தொற்றுப் பரவல்களைக் கட்டுப்படுத்தவும் முடியாது. SLT-MOBITEL இனால் வழங்கப்பட்ட இந்த நன்கொடைக்காக நாம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இதனூடாக, சமூகத்தை மேம்படுத்தவும் உயிர்களை காப்பதில் பங்களிப்பு வழங்கவும் முடியும்" என்றார்.

அரச வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்வது மற்றும் தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டிலிருந்து விடுபடுவது போன்றவற்றை இலக்காகக் கொண்ட, நிறுவனத்தின் ESG செயற்பாடுகளில் அங்கமாக இந்த நிகழ்ச்சித் திட்டம் அமைந்துள்ளது.

ஒன்பது மாகாணங்களுக்கும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. மேலும், சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவிடமிருந்து கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் இந்த மருந்துப் பொருட்கள் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

# மட்டக்களப்பு நகர மக்கள் வங்கி மாணவர்களை கௌரவித்தது

■ க. விஜயரெத்தினம்



மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியடைந்த 64 மாணவர்களுக்கு மட்டக்களப்பு நகர மக்கள் வங்கியின் நிதிப் பங்களிப்பில் மூலம் பதக்கம் அணிவித்து பாராட்டி கௌரவித்து> கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அதிபர் இராசதுரை பாஸ்கர் தலைமையில் வெள்ளிக்கிழமை (12) நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு நகர மக்கள் வங்கியின் முகாமையாளர் என். தினேஸ்குமார், உதவி முகாமையாளர் திருமதி சுதர்ஷினி செந்தூரன், ஆசிரியர்களான எஸ். சிற்சபேசன், வை. துவாரகன், திருமதி தர்ஷினி ஜெயந்திரன், திருமதி ஸ்ரீதாரணி நகுலராஜ், வங்கியின் உதவிச் செயலாளர் வீ. சிவம், வங்கி உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் கலந்துகொண்டார்கள்.



சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி சங்கத்தின்

# முகாமைத்துவ பணிப்பாளர் ஜுனைதாவுக்கு பிரியாவிடை

■ நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கி சங்கத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக இறக்காமத்தைச் சேர்ந்த ஏ.எல்.யூ ஜுனைதா கடந்த ஆறு வருடங்களாக கடமையாற்றி இறக்காம பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதையிட்டு பிரியாவிடை நிகழ்வு வெள்ளிக்கிழமை (12) சமுர்த்தி வங்கி சங்க கூட்டம் மண்டபத்தில் நடைபெற்றது

சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்க கட்டுப்பாட்டுச் சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில், சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் ஊடகவியலாளர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ முவஃபிக்கா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# ஹட்டன் நஷனல் வங்கியின் தாதிய உத்தியோகத்தர்களுக்கான விசேட கடன் அட்டை

■ நிதர்சன் வினோத்



சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு, தாதிய உத்தியோகத்தர்களுக்கென விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் அட்டை வழங்கும் அங்குரார்ப்பன நிகழ்வு வெள்ளிக்கிழமை (12) யாழில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையும், தாதியர் பயிற்சி கல்லூரியும் இணைந்து முன்னெடுத்த சர்வதேச தாதியர் தின நிகழ்வில், யாழ். ஹட்டன் நஷனல் வங்கியின் மெட்ரோ கிளையினரும் பங்காளர்களாக இணைந்து கொண்டு தாதியர்களுக்கென விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் அடடைகளை வழங்கி வைத்தனர்.

குறித்த நிகழ்வு, யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சி கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ். ஹட்டன் நஷனல் வங்கியின் மெட்ரோ கிளையின் செயற்பாடு முகாமையாளர் சி. மயூரன், யாழ். ஹட்டன் நஷனல் வங்கியின் உறவு நிலை முகாமையாளர் டசிகா ஜனகன், பொது வைத்திய நிபுணர் பேரானந்தராஜா, தாதியர் பயிற்சி கல்லூரி அதிபர் ஜெயக்குமார், பிரதம தாதிய பரிபாலகர் சந்திர மவுலீசன், தாதிய பரிபாலகர் சூரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூகத்தில் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தும் செயற்றிட்டம்:

# ஊடகவியலாளர்களும் இளைஞர்களும் சந்திப்பு

■ ஒலுமுதீன் கியாஸ்





சமூகப் பொறுப்புகள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடையே தொடர்பாடலை அதிகரிக்கும் அறிவூட்டல் செயலமர்வு சனிக்கிழமை (13) கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இளைஞர்களின் ஈடுபாடு மற்றும் அவர்களின் சக்தி ஆகியவற்றின் ஊடாக, சமூகத்தில் நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்தல் என்ற செயற்றிட்டத்தின் கீழ், இந்தச் செயலமர்வு நடைபெற்றது. இதை FOSDOO தன்னார்வ தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

FOSDOO அமைப்பின் செயற்றிட்ட அதிகாரி விஜயசீலன் சஞ்சீவன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது, இளைஞர்கள் மத்தியில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பாக பல்வேறு கருத்துகள் நிலவுகின்ற இந்த நிலையில், ஊடகவியலாளர்களுடனான இன்றைய சந்திப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.


இளைஞர்கள் எப்போதும், வேகமாக சிந்திப்பவர்கள். தங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் வேகமாக கிடைக்க வேண்டுமென செயற்படுபவர்கள். இந்த நிலையில், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் மூலம் இளைஞர்களுடைய சுய எண்ணக்கரு, சுய மதிப்பீடு தொடர்பாக அவர்கள் நல்ல மன வலிமை ஒன்றைப் பெற்றிருப்பார்கள். இதன் ஊடாக சமூகத்தின் ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் இலகுவாக கொண்டுவர முடியும்.

சமூகத்தின் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து, அவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுத் தரக்கூடிய சூழ்நிலையை உருவாக்குபவர்கள் ஊடகவியலாளர்களாவர். சமூக மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்கும் தேவையான மிகப் பெரிய ஆயுதம் ஊடகங்கள் ஆகும். இந்தச் செயற்றிட்டம் அநுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய ஆறு மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார்.

செமலமர்வின் வளவாளராக அரசியல் விமர்சகரும் ஊடகவியலாளருமான நிக்சன் கலந்துகொண்டு தெளிவூட்டல்களை வழங்கினார்

அற்புதங்களும் ஆபத்துகளும் நிறைந்த

# கபில்வத்தை காட்டுவழி யாத்திரை



■ காரைதீவு நிருபர் சகா

இலங்கையில் 'சித்தர்களின் தாய் வீடு' என்று போற்றப்படும் ஆதி கதிர்காமம் கபில்வத்தைக்கான அற்புதமானதும் ஆபத்தானதுமான கபில்வத்தை காட்டுவழி யாத்திரை, சனிக்கிழமை (13) மொனராகலையில் இருந்து ஆரம்பமானது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான 30 பக்தர்கள் அடங்கிய குழு பங்கு பற்றிய இந்த யாத்திரை, சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன் ஆகியோரின் ஏற்பாட்டிலும், நமசிவாய சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகளின் வழிகாட்டலிலும் ஆரம்பமாகியது.

சனிக்கிழமை (13) ஞாயிற்றுக்கிழமை (14) என இரண்டு தினங்கள் கபில்வத்தையில் தங்கியிருந்து வழிபாட்டியற்றினார்கள்.

எந்த வித வெளியுலக தொடர்புமே இல்லாத சித்தர்களின் புனித பூமியாகிய கபில்வத்தையில், முருக பெருமான் தவமியற்றி அற்புத சக்திகளை பெற்று, ஆதி சமாதியாகி ஒளியில் கலந்த அற்புத இடம், நவகோடி சித்தர்களுக்கும் முருக பெருமான் தவத்தை கற்றுக் கொடுத்த இடம், போகர் பெருமான் ஆதியில் தவமியற்றிய தபோவனம், கதிர்காமத்தில் ஆதியில் இருந்த போகர் பெருமான் நவ பாஷாணங்களை கொண்டு உருவாக்கிய நவ பாஷாண வேல், கஜபாகு மன்னன் முதல் முதலில் இலங்கையில் கண்ணகி வழிபாடு நடத்திய இடம், இன்றுவரை இலங்கையில் சிம்மாசனத்தில் அமரும் அரசர்கள், அமைச்சர்கள் யாராக இருந்தாலும் இங்கு சென்று வழிபாடு நடத்திய பின்னர் தான், பதவியில் அமர்வது சாசனமாகவே உள்ளது. (முதல் முதலில் துட்டகைமுனு இந்த வழக்கத்தைத் தொடங்கி வைத்தான்) இவைபோன்ற பல்வேறு ஆத்மிக வரலாற்று நம்பிக்கைகளின் அடிப்படையில், கபில்வத்தை கீர்த்திமிக்க புனித பிரதேசமாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சப்ரகமுவ பல்கலைக்கழக கணினி பீடத்தின்

# பீடாதிபதியாக பேராசிரியர் ச. வசந்தப்ரியன் நியமனம்

■ நிதர்சன் வினோத்



சப்ரகமுவ பல்கலைக்கழக கணினி பீடத்தின் முதலாவது பீடாதிபதியாக பேராசிரியர் ச. வசந்தப்ரியன் நியமிக்கப்பட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு டிசெம்பர் 27 ஆம் திகதி, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் ஒன்பதாவது பீடமாக கணினி பீடம், கல்வி அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் தாபக பீடாதிபதியாக பல்கலைக்கழகப் பேரவையால் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த தரவு அறிவியல் துறையின் தலைவர் பேராசிரியர் ச. வசந்தப்ரியன், மே மாதம் மூன்றாம் திகதி முதல் அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்குச் செயற்படும் வகையில், பீடாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், சுன்னாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் ச. வசந்தப்ரியன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 97ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவில் கல்வி கற்றவர். இவர் தனது கலாநிதி பட்டத்தை, சீனாவின் வுஹான் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திலும், முதுகலை அறிவியல் பட்டத்தை எய்ந்தோவன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலும் (Eindhoven University of Technology), கணினி விஞ்ஞானத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தை பேராதனை பல்கலைக்கழகத்திலும் பெற்றார்.

2005ஆம் ஆண்டு செப்டெம்பர் முதல், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் பேராசிரியர் ச. வசந்தப்ரியன், இளம் வயதில் கணினி பேராசிரியராக உயர்வடைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கர்நாடகா

# ஆட்சியை பிடித்தது காங்கிரஸ்

கர்நாடக சட்டசபை தேர்தலில் 136 தொகுதிகளை கைப்பற்றி, அறுதிப்பெரும்பான்மை பலத்துடன் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்துள்ளது.

கர்நாடகத்தில் முதலமைச்சர் பசவராஜ் பொம்மை தலைமையில் நடந்து வரும் பா.ஜனதா ஆட்சியின் பதவி காலம் வருகிற 24ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

இதையடுத்து கர்நாடகத்தில் 16 ஆவது சட்ட சபையை தேர்ந்தெடுப்பதற்காக 224 தொகுதிகளைக் கொண்ட கர்நாடக சட்டசபைக்கு கடந்த 10ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது.



இத்தேர்தலில் 2,615 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். மொத்தமாக 3 கோடியே 88 இலட்சத்து 51 ஆயிரத்து 807 வாக்காளர்கள் வாக்களித்தனர். அதாவது 73.19 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன.

இதில் 136 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் அக்கட்சி 5 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் தனிப்பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைப் பிடித்துள்ளது.

2018ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பா.ஜனதா 104 இடங்களையும், காங்கிரஸ் 80 தொகுதிகளையும், மதசார்பற்ற ஜனதா தளம் கட்சி 37 தொகுதிகளையும் கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடகா



## கண்ணீர் விட்டு அழுத வேட்பாளர்

கர்நாடக சட்டசபை தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று முன்தினம் எண்ணப்பட்டது.

இதில், காங்கிரஸ் 136 தொகுதிகளில் அமோக வெற்றிபெற்றுள்ளது. இதன் மூலம் தனிப்பெரும்பான்மையுடன் காங்கிரஸ் ஆட்சியமைக்கவுள்ளது.

பாரதிய ஜனதா கட்சி 66 தொகுதிகளை மாத்திரம் கைப்பற்றி படுதோல்வியடைந்ததுடன் ஆட்சியையும் இழந்துள்ளது.

இந்நிலையில், இத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரை விட 16 வாக்குகள் வித்தியாசத்தில் பா.ஜ.க வேட்பாளர் வெற்றிபெற்ற ருசிகர சம்பவமும் அரங்கேறியுள்ளது.

ஜெயாநகர் தொகுதியில் பா.ஜ.க வேட்பாளராக ராமமூர்த்தி, காங்கிரஸ் வேட்பாளராக சவுமியா, மதச்சார்பற்ற ஜனதா தளம் வேட்பாளராக கலிகவுடா போட்டியிட்டனர்.

இதில் பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் ராமமூர்த்தி 57,797 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் சவுமியா 57, 781 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார்.

இந்நிலையில் 16 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்டதையடுத்து காங்கிரஸ் வேட்பாளர் சவுமியா கண்ணீர் விட்டு அழுதுகொண்டே வாக்கு எண்ணும் மையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

விழுப்புரம்

## ஆறு ஆண்களை திருமணம் செய்த பெண்

பெண்ணொருவர் ஆறு ஆண்களை ஏமாற்றித் திருமணம் செய்து, அவர்களது நகை மற்றும் பணத்தை அபகரித்துக் கொண்டு ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ள சம்பவம் விழுப்புரத்தில் இடம்பெற்றுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் மகன் மணிகண்டன். இவர் பேஸ்புக் மூலம் மகாலட்சுமி என்பவரைக் காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில் தனது வீட்டில் தனது காதலுக்கு எதிர்ப்பு தெரிப்பதாகவும் இதனால் தனது வீட்டை விட்டு வருவதாகவும், இருவரும் திருமணம் செய்துகொள்வோம் எனவும் மகாலட்சுமி தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, இருவரும் திருமணம் செய்துகொண்டுள்ளனர். திருமணத்தின் போது, மணிகண்டனின் வீட்டிலிருந்து மகாலட்சுமிக்கு 8 பவுனில் நகை போட்டுள்ளனர்.

இந்நிலையில் திருமணமான 26ஆவது நாள் தனது வீட்டில் சொத்து பிரச்சினை உள்ளதாகவும் தான் ஊருக்கு சென்று அப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டு, வந்துவிடுகிறேன் என்று மகாலட்சுமி கூறி சென்றுள்ளார்.

மனைவி எப்போது திரும்பி வருவார் என்கிற ஏக்கத்துடன் மணிகண்டனும் காத்திருந்துள்ளார். மனைவிக்கு தொலைபேசியில் தொடர்புகொண்ட போதும் அவர் அழைப்பினை எடுக்கவில்லை. இதன் பின்னரே மணிகண்டனின் குடும்பத்தினருக்கு மகாலட்சுமி மீது சந்தேகம் வலுத்தது.

இந்நிலையில் தனக்கு அடிக்கடி போன் செய்தால் கொலை செய்து விடுவேன் என்று மகாலட்சுமி கொலை மிரட்டலும் விடுத்துள்ளார்.

மனைவியின் இந்த மிரட்டலை சற்றும் எதிர்பாராத மணிகண்டன் அதிர்ந்து போய் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையில் மகாலட்சுமி ஏற்கெனவே நான்கு ஆண்களை ஏமாற்றி திருமணம் செய்திருப்பதும் ஐந்தாவதாக அவர் விரித்த வலையில் சிக்கியவர் தான் என்பதையும் மணிகண்டன் தெரிந்துகொண்டார்.

அத்துடன், ஆண்களை ஏமாற்றி திருமணம் செய்து அவர்கள் வீடுகளில் இருந்து கிடைக்கும் நகை, பணத்தை சுருட்டிக்கொண்டு தலைமறைவாகி விடுவதை மகாலட்சுமி ஒரு தொழிலாகவே பார்த்து வந்துள்ளார் என்பதும் அவர் தற்போது ஆறாவதாக ஒரு நபரைத்த திருமணம் செய்து கொண்டு அவருடன் குடும்பம் நடத்தி வந்ததும், தெரியவந்துள்ளது.

# டுவிட்டரின் CEO இனிமேல் இவர்தான்

டுவிட்டர் நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக அமெரிக்காவைச் சேர்ந்த லிண்டா யாக்கரினோ நியமிக்கப்பட்டுள்ளார்.

டுவிட்டரில் பல்வேறு அதிரடி மாற்றங்களை செய்துவந்த எலான் மஸ்க், அந்நிறுவனத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரி பொறுப்பிலிருந்து விலகுவதாக அறிவித்ததுடன், புதிய தலைமை செயற்பாட்டு அதிகாரியைத் தேர்வு செய்திருப்பதாகவும் 6 வாரங்களில் அவர் தனது



பணியைத் தொடங்குவார் என்றும் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், பிரபல ஊடக நிறுவனமான NBC Universal இன் முன்னாள் விளம்பர தலைவராக இருந்த லிண்டா யக்காரினோவை ட்விட்டரின் புதிய சி.இ.ஓ-வாக நியமிக்கப்பட்டு இருப்பதாக எலான் மஸ்க் தனது ட்விட் பதிவில் தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் நிறுவனத்தின் விளம்பரம், வணிக செயற்பாடுகளில் லிண்டா கவனம் செலுத்துவார் என்றும், நிறுவனத்தின் தயாரிப்பு, வடிவமைப்பு, புதிய தொழில்நுட்பத்தில் தான் கவனம் செலுத்துவேன் என்றும் மஸ்க் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்



## சண்டை நிறுத்தம் அறிவிப்பு

கடந்த ஐந்து நாள்களாக நீடித்த கடும் யுத்தத்தினிடையே நேற்றுமுன்தினம் இரவு 10 மணி முதல் பாலஸ்தீன ஜிகாத் இயக்கத்தினருக்கும் இஸ்ரேல் இராணுவத்திற்கும் இடையே சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சமரச முயற்சியில் ஈடுபட்ட எகிப்து அரசு, இருதரப்பும் வன்முறை யுத்தத்தைக் கைவிடும்படி கேட்டுக் கொண்டுள்ளது. இந்தச் சண்டையில் பொது மக்கள் 13 பேர் உள்ளிட்ட 33 பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர்.

சண்டை நிறுத்தம் அறிவிக்கப்பட்ட போதும் ரொக்கெட் சைரன் ஒலி இரவில் கேட்டுக் கொண்டே இருப்பதாக இஸ்ரேல் மக்கள் தெரிவித்தனர்.

## பிரித்தானியாவிடம் இருந்து மீகத் திட்டம்



கோஹினூர் வைரம் மற்றும் பழங்கால கோவில் சிலைகளை பிரித்தானியாவிலிருந்து மீட்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து பிரித்தானியாவைச் சேர்ந்த பிரபல ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில், ‘சுதந்திரத்திற்கு முந்தைய காலனியாதிக்க ஆங்கிலேயர் ஆட்சியில் பறிபோன கலைப் பொருட்களை இந்தியா திருப்பி அனுப்புமாறு கேட்கத் திட்டமிட்டுள்ளது’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது பிரதமர் மோடியின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாக இருக்கும் என்றும், இரு நாடுகளுக்கு இடையே இராஜதந்திர மற்றும் வர்த்தக பேச்சுவார்த்தைகளின் போது இது குறித்து பேசப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பிரித்தானியா முழுவதும் உள்ள சிறிய அருங்காட்சியங்கள், தனியார் கலைப்பொருள் சேகரிப்பாளர்கள் ஆகியோர் தாமாக முன்வந்து இந்திய கலைப்பொருட்களை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐ.பி.எல்: வெளியேற்றப்பட்ட டெல்லி கப்பிட்டல்ஸ்



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில் இருந்து டெல்லி கப்பிட்டல்ஸ் வெளியேற்றப்பட்டுள்ளது.

டெல்லியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே தொடரிலிருந்து கப்பிட்டல்ஸ் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கப்பிட்டல்ஸ்


கிங்ஸ்: 167/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரபஹ்சிம்ரன் சிங் 103 (65) ஓட்டங்கள். பந்துவீச்சு: இஷாந்த் ஷர்மா 2/27 [3], முகேஷ் குமார் 1/3 [1], பிரவீன் டுபே 1/19 [3], அக்ஸர் பட்டேல் 1/27 [4], குல்டீப் யாதவ் 1/32 [4])

கப்பிட்டல்ஸ்: 136/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டேவிட் வோர்னர் 54 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹர்பிறீட் பிறார் 4/30 [4], ராகுல் சஹர் 2/16 [4], நாதன் எலிஸ் 2/26 [4])

போட்டியின் நாயகன்: பிரபஹ் சிம்ரன் சிங்

இந்நிலையில் முன்னதாக நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வென்றிருந்தது.

இதேவேளை, அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸை நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டான்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## அஸ்டன் வில்லாவிடம் தோற்ற டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், அஸ்டன் வில்லாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற நொட்டிங்ஹாம் பொரெஸ்டுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியது.

அந்தவகையில் பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 82 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுகின்றது. 81 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 66 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும், அதே 66 புள்ளிகளுடன் ஆனால் கோலெண்ணிக்கை வித்தியாசம் காரணமாக நான்காமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட் காணப்படுகின்றது. இதில், ஆர்சனல் ஏனைய அணிகளை விட ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.



### கல்முனை கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள்:

## சம்பியனானது கல்முனை பஹ்ரியா

■ ஏ.எல்.எம். ஷினாஸ், நூருல் ஹுதா உமர்

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட கல்முனை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளில் அல்-பஹ்ரியா மகா வித்தியாலயம் சம்பியனானது.

கல்முனை கோட்டத்திலுள்ள கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேசங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள், மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியதுடன் 125 போட்டி நிகழ்சிகள் நடைபெற்று இரண்டாமிடத்தை கல்முனை அல்- மிஸ்பா மகா வித்தியாலயமும் தனதாக்கி கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### இத்தாலிய சீரி ஏ தொடர்:

## இப்ஸியாவிடம் தோற்ற மிலன்



இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், இப்ஸியாவின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் ஏ.சி மிலன் தோற்றது.

சலெர்னிட்டானாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் அத்லாண்டா தோற்றது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 83 புள்ளிகளுடன் சம்பியன்களாகியுள்ள நாப்போலி காணப்படுகின்றது. 66 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஜுவென்டஸும், அதே புள்ளிகளுடன் ஆனால் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் மூன்றாமிடத்தில் இன்டர் மிலனும், 65 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லேஸியோ காணப்படுகின்றது. இதில் இன்டர் மிலனும், லேஸியோவும் மற்றைய அணிகளை விட ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளன.





### நுவரெலியா கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தொடர்:

## சம்பியனான ஹைபொரஸ்ட் தமிழ் பாடசாலை

### 40 வயதுக்குட்கு மேற்பட்டோரில் சம்பியனான நுவரெலியா மாநகர சபை

■ ஆ. ரமேஸ்

நுவரெலியா கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் ஹைப்பொரஸ்ட் இல (03) தமிழ் பாடசாலை, நுவரெலியா மாநகர சபை ஆகியன சம்பியனாகின.

அணிக்கு 11 பேர் கொண்ட 16 அணிகள் பங்கேற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான தொடரின் இறுதிப் போட்டியில் நுவரெலியா அகடமியை வென்றே தமிழ் பாடசாலை சம்பியனானது.

40 வயதுக்கு மேற்பட்டோருக்கான தொடரில் 12 அணிகள் பங்கேற்ற நிலையில் இறுதிப் போட்டியில் நேஸ்பி விளையாட்டுக் கழகத்தை வென்றே மாநகர சபை சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 15 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.